திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன்: தலைவரவர்களே, மதுரையிலே ஒரு மாஸ்க் விஸ்தரிப்புக்காக வக்பு போர்டைச் சேர்ந்த நிலத்தை ஆர்ஜிதம் செய்ய 5 லட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டது. அந்தத் தொகை வக்பு போர்டுக்குச் சேருவதற்கு இன்னும் காலதாமதம் ஆகிறது. அந்தப் பணம் வக்பு போர்டு சபைக்கு வந்து சேர்ந்ததா இல்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: கனம் உறுப்பினர் அவர்கள் நகரசபைத் தலைவராக இருந்தார்கள். அதனால் அவர்களுக்கே அந்த விபரம் நன்றாகத் தெரியும்.

திரு.மா.வெ. நாராயணசாமி: தலைவரவர்களே, வக்பு போர்டுக்குச் சொந்தமான இடங்களில் 20, 30 ஆண்டு காலமாக சாலைகள் பழுது பார்க்கப் படாமல் இருக்கின்றன. அந்தச் சாலைகளை நகராட்சிகள் ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைத்தால் செப்பனிட வாய்ப்பு இருக்கும். ஆகவே, நம்முடைய அரசாங்கம் பழுதடைந்த சாலைகளை நகரசபைகளிடமும், ஊராட்சி ஒன்றியங் களிடமும் வழங்க வக்பு போர்டுக்கு ஆலோசனை வழங்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: நகரசபைகளும், ஊராட்சி ஒன்றியங்களும் சம்பந்தப்பட்ட சாலைகளைப் பராமரிப்பதில் ஆட்சேபணை இருக்காது என்று கருதுகிறேன். இதுபோன்ற முயற்சிகளுக்கு வக்புபோர்டு சாதகமாகத்தான் இருக்கும்.

### *Sale of vegetables, etc., through Co-operatives in Madras.*

* 405 *Q.*— Thiru R. R. MUNUSAMI : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state :

(*a*) whether the Nilgiris Co-operative Marketing Society Limited has undertaken the wholesale supply of vegetables to the Super markets in Madras City ; and

(*b*) if so, the details there of ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) and (இ) : உதகமண்டலத்திலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் பயிராகும் காய்கறிகளை 16—6—1973 முதல் 12—7—1973 வரையில் சென்னை மாநகரிலுள்ள திருவல்லிக்கேணி நகரக் கூட்டுறவுச் சங்கம் (T. U. C. S.), காமதேனு சிறப்பங்காடி ஆகியவற்றின் மூலம் வழங்கும் பொறுப்பை நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம் மேற்கொண்டது. காய்கறிகளைக் கொள்முதல் செய்தல், எடுத்துச் செல்லுதல், சென்னையில் விற்பனை செய்தல் ஆகிய வகைகளில் இச்சங்கத்திற்குப் பல இடையூறுகள் ஏற்பட்ட காரணத்தால், இச்சங்கம் காய்கறி விற்பனையை 12—7—1973 முதற்கொண்டு நிறுத்தி விட்டது. சென்னையிலுள்ள இச்சங்கத்தின் கிளை, முதற்கண் உருளைக் கிழங்கு, முள்ளங்கி, முட்டைக்கோஸ் ஆகியவற்றின் விற்பனையுடன் 1—1—1974 முதற்கொண்டு தன் வணிகத்தைத் தொடங்கியுள்ளது. மாற்றியமைக்

1974 மார்ச் 13]

கப்பட்ட திட்டத்தின்படி, இக்கிளை முக்கியமாகச் சில்லறை விற்பனையை மட்டுமே மேற்கொள்ளும். பெருமளவில் காய்கறிகள் வரும்போது மொத்த விற்பனையை இக்கிளை மேற்கொள்ளும்.

(முற்பகல் 9–30)

Dr. H. V. HANDE : Sir, may I know the steps taken by this Government to reduce the exorbitant increase in the cost of the vegetables and whether it is possible for the Government to ask a few such co-operative societies to reduce the cost of vegetables as the people are finding it difficult to buy them. It is also stated that the transport charge between the point of production of vegetables and the point of their delivery has increased so much that they are not able to sell them cheaply. So, may I know the active and definite steps taken by the Government to reduce the cost of vegetables ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவர் அவர்களே, முதலில் டிரான்ஸ்போர்ட் சார்ஜ் அதிகமாகிறது என்றுதான் நிறுத்தப் பட்டது. இப்போது சீசனில்- உருளைக்கிழங்கு, முட்டைக்கோஸ் ஆகியவை மட்டும் கொண்டுவர ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. பெங்களூரில் இருந்து இங்கே கொண்டுவருகிறபோது, மற்ற இடங்களில் இருந்தும் இங்கு வருவதால் பெங்களூர் மார்க்கெட்டோடு நிற்க முடியவில்லை. ஆகவே எவ்வளவு குறைந்த அளவில் கொடுக்கலாமோ அந்த அளவுக்குக் குறைந்த விலையில் கொடுப்பதற்கான புதிய முயற்சிகள்தான் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

திரு. எம். தேவராசன் : தலைவர் அவர்களே, இந்த விற்பனைச் சங்கத்திற்கு நான்தான் தலைவராக இருக்கிறேன். அங்கிருந்து வாடகை லாரி மூலமாகத்தான் காய்கறிகளைக் கொண்டு வரவேண்டியதாக இருக்கிறது. சொந்தமாகவே ஒரு லாரி வாங்குவதற்கு போர்டில் தீர்மானம் போட்டிருக்கிறோம். சொந்த லாரி இருந்தால் ஒருநாள் விட்டு ஒருநாள் சென்னைக்குக் காய்கறி கொண்டுவர வசதியாக இருக்கும். ஆகவே, அரசுக் கோட்டாவில் இருந்தோ, வேறு வழியிலோ அந்தச் சங்கத்திற்கு லாரியைக் கொடுப்பதற்கு ஏதாவது ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : மேற்கொண்டு வியாபாரத்தை நல்லமுறையில் துவங்க என்ன என்ன செய்யவேண்டும் என்பதைப் பற்றித்தான் இப்போது யோசித்துக் கொண்டிருக்கிறோம்.

Thiru K. S. KOTHANDARAMIAH : Sir, not only in big towns and cities but even, in rural areas, the cost of vegetables has gone so high that an ordinary family is not able to purchase them. Even in Hosur and Krishnagiri towns the brinjals which

used to cost about eight annas per kilo , now costs Rs. 1·50 or Rs. 2 because they are exported to other cities. So, may I know whether the Hon. Minister will make arrangements to see that the cost of vegetables is reduced ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இதற்கான முயற்சிகளை விவசாய இலாகா செய்துகொண்டிருக்கிறது. அரசாங்கமே உற்பத்தி செய்து கொடுப்பதா அல்லது விவசாயிகளுக்கு வேறுபல வகைகளில் ஊக்கம் அளித்து உற்பத்தி செய்து கொடுப்பதா என்பது எல்லாம் பரிசீலனையில் இருக்கிறது. வெளிமார்க்கெட் விலை அதிகமாக இருக்கிற போது அவர்கள் அங்கே விற்றுவிடுகிறார்கள். ஆகவேதான் சீசனில் விவசாயிகளை அணுகி எந்த முறையில் மலிவான முறையில் பெற்றுத் தரலாம் என்பது பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

* 406 *Q*—THIRU N. DENNIS : } Will the Hon. the Minister
THIRU G. R. EDMUND : }
for Food and Co-operation be pleased to state :

(*a*) whether the Tamil Nadu Co-operative Marketing Federation has undertaken the sale of Kashmir apples in this State ; and

(*b*) if so, the details therof ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு கூட்டுறவு விற்பனைச் சம்மேளனம் ரொக்கம் செலுத்தி, சரக்குகளைப் பெறுதல், சரக்கு ஒப்படை ஆகிய அடிப்படைகளின் பேரில் 31—12—1973 வரை காஷ்மீர் பழ உற்பத்தியாளர் கூட்டுறவுச் சம்மேளனத்தினிடமிருந்து 4,506 பெட்டி ஆப்பிள்களை இறக்குமதி செய்ய ஏற்பாடு செய்துள்ளது. இந்த சம்மேளனம் 31—12—1973 வரை 1,572 பெட்டி ஆப்பிள்களை விற்று மொத்தம் ரூ. 570 வருவாய் ஈட்டியுள்ளது. குளிர்ப்பதனச் சாதனத்திற்காக கட்டண வகையில் ரூ. 13,793 கிடைத்தது.

திரு பெ. சௌந்தரபாண்டியன் : காஷ்மீர் ஆப்பிள் வெளிமார்க்கெட்டில் குறைவாக இருப்பதாகவும், கூட்டுறவு மார்க்கெட்டில் அதிக விலைக்கு விற்பதாகவும் பொதுமக்கள் கருதுகிறார்கள். ஆகவே காஷ்மீர் ஆப்பிள் என்ன விலைக்கு வாங்கப்படுகிறது ? இங்கே என்ன விலைக்கு விற்கப்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவர் அவர்களே, காஷ்மீர் ஆப்பிள் வெளிமார்க்கெட்டில் கிலோ ரூ. ஆறு, ஏழுக்கு விற்கிறார்கள். கூட்டுறவு மார்க்கெட்டில் விற்பதற்கு நாம் மொத்த